**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 175** **நாள்: 03.11.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சி வளசரவாக்கம் மண்டல அலுவலகத்தில் டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சி, வளசரவாக்க மண்டல அலுவலகத்தில் கோட்டம்–143 முதல் 155 வரை உள்ள எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அதிக அளவு குப்பைகளை உருவாக்கும் தனியார் நிறுவனங்கள், உணவகங்கள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளின் நிர்வாகிகள் மற்றும் உரிமையாளர்களுக்கு டெங்கு காய்ச்சல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை குறித்த விழிப்புணர்வு கூட்டம் மண்டல அலுவலர் திருமதி எஸ்.சசிகலா அவர்கள் தலைமையில் இன்று (03.11.2018) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் தனியார் நிறுவனங்கள், உணவகங்கள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளின் நிர்வாகிகள் மற்றும் உரிமையாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும் தங்கள் நிறுவனங்கள் மற்றும் குடியிருப்புகளின் சுற்றுபுறங்கள் தூய்மையாக உள்ளது என வாரந்தோறும் சான்றளிக்க வேண்டும் எனவும், காலி மனைகளில் குப்பைகள் கொட்டுவதினை தவிர்க்க வேண்டுமெனவும் 15 நட்களுக்குள் மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் என தாங்களே தரம் பிரித்து கையாள வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் மண்டல செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர், சுகாதார அலுவலர், துப்புரவு மேற்பார்வையாளர், ஆய்வாளர், தனியார் நிறுவனங்கள், உணவகங்கள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளில் நிர்வாகிகள் மற்றும் உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**